2012 மே 15]

பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

272—

திருமண மண்டபம்

***5715—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூரிலுள்ள அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு வெள்ளை வினாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் சார்பாக திருமண மண்டபம் கட்ட சுமார் 10,000 சதுர அடி இடம் தேவைப்படுகிறது. இத்திருக்கோயில் சார்பில் திருமண மண்டபம் கட்ட போதுமான இடவசதி இல்லாததால் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்கி, சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் கோயில் வசிஷ்ட மாமுனிவரால் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கோயில் அதிகப்படியான ஏழையெளியோர் பயன்படும் வகையில் உள்ளதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே திருமண மண்டபம் கட்டித் தருவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக, திருக்கோயில் வளாகத்தைச் சுற்றி 8,000 சதுர அடி நிலம் உள்ளது. அவ்விடத்தில் 40 கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இதன்மூலம் திருக்கோயிலுக்கு வருடத்திற்கு 18 இலட்சத்து 30 ஆயிரத்து 724 ரூபாய் வருமானம் வரப்பெறுகிறது. மேலும், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக நஞ்சை நிலம் 1.2 ஏக்கர் உள்ளது. இந்நிலத்தின்மூலம் வருகின்ற வருமானம் பூசாரிகளுக்கு பூசை மானியமாக வழங்கப்படுகிறது. இதைத் தவிர வேறு காலி நிலம் இத்திருக்கோயிலுக்கு இல்லை. இத்திருக்கோயிலுக்கு மண்டபம் கட்ட வேண்டுமென்றால் சுமார் 10,000 சதுர அடி தேவைப்படுவதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையான இடம் கிடைக்க வழிவகை செய்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஒப்புதலைப் பெற்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]